## சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வழக்கு | : | OS.161/2024 | கிராமம் | : | கிழபருத்திக்குடி |
| சாட்சி | : | வா.சா–1 | வட்டம் | : | காட்டுமன்னார்கோவில் |
| பெயர் | : | விஜயராணி | வயது | : | 44 |
| த/பெ | : | அருண்ராஜ் | தொழில் | : | தனியார் ஆசிரியர் |

2026–ம் ஆண்டு மார்ச் 04–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி. வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன்.

1. 17.09.2020 தேதியிட்ட கிரைய உடன்படிக்கையின் அசல் வா.சா.ஆ.1.
2. 30.11.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் இரசீது வா.சா.ஆ.2.
3. மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3.
4. 17.09.2020 தேதியிட்ட தாவா சொத்துக்கான கணிணி பட்டா நகல் வா.சா.ஆ.4.

5. 23.09.2020 தேதியிட்ட காசிநாதன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கணிணி நகல் வா.சா.ஆ.5.

6. தாவா சொத்துக்கான வில்லங்கச் சான்று வா.சா.ஆ.6.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),
ஜெயங்கொண்டம்.